IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.110/2024

dated : 09.04.2025

P.W.1

Name விஜயன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நல்லய்யா என்பவர் என் தாத்தா. அவருடன் பிறந்த சகோதரர் அழகர்ராஜா. நல்லாய்யாவிற்கும், அழகர்ராஜாவுக்கும் கூட்டாக சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அவர்களுக்கிடையே சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள். அதில் அழகர்ராஜாவுக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது நல்லாய்யாவிற்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நல்லய்யா சுயமாகவும் சில சொத்துக்களை கிரையம் பெற்றிருந்தார் என்றால் சரிதான். அவரது மனைவி மஞ்சம்மாள் பெயரிலும் பல சொத்துக்கள் வாங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். எனது தாத்தா நல்லய்யா 1977 ல் இறந்துபோனார். அவருக்கு மஞ்சம்மாள், ராமகிருஷ்ணன், வெங்கடகிருஷ்ணன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மஞ்சம்மாள், ராமகிருஷ்ணன், வெங்கடகிருஷ்ணன் ஆகியோர் நல்லய்யாவின் சொத்துக்களை பாகம் பிரித்துக்

கொண்டார்கள் அது வாய்மொழி பாகப்பிரிவினை ஆகும். என் தந்தை இறந்த ஓராண்டு கழித்து பாகம் பிரித்துக் கொண்டார்கள் அது எந்த ஆண்டு என்று எனக்கு தெரியாது. வாய்மொழிப் பாகப்பிரிவினையை உறுதி செய்ய வேறு ஆவணங்கள் இல்லை. மூவரும் தனிதனியே அனுபவித்து வந்தனர் என்பதைக் காட்டும் ஆவணங்கள் ஏதும் இல்லை. மஞ்சம்மாள், ராமகிருஷ்ணன், வெங்கடகிருஷ்ணன் மூவரும் நல்லய்யாவின் சொத்துக்களை ஒருபோதும் பாகம் பிரித்துக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 1வது தபசில் மற்றும் 2வது தபசில் சொத்தில் பாகம்தான் கூறியுள்ளேன். அவை இரண்டும் நல்லய்யாவின் சொத்துக்கள் என்றால் சரிதான். நல்லய்யாவின் சொத்துக்கள் முன்னதாக பாகப்பிரிவினை ஏதும் செய்யாமல் இருந்து வருவதால்தான் நான் இவ்வழக்கில் பாகம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. 10.07.1987 அன்று குடும்ப பாகப்பிரிவினை ஏற்பட்டதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். அது குறித்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நல்லய்யாவின் அனைத்து சொத்துக்களை பொறுத்தும் பாகப்பிரிவினை கோரவில்லை என்றும் எனவே இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடன் பிறந்த சகோதரர்கள் மூவர். கணேசன், ஜனார்த்தனன், ஜெகதீசன் ஆகியோர்கள் ஆவார்கள். அவர்களை வழக்கு தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை வழக்கில் என்னுடன் பிறந்தவர்களும் அவசியத்தரப்பினர்கள் என்றும் எனவே அவர்களை சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. மஞ்சம்மாள்

எனக்கு ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் எனக் கூறியுள்ளேன். அதன் அசலைத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணம் என்னிடம் இல்லை. அசல் ஆவணம் காணவில்லை என நான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. மஞ்சம்மாள் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் அசலை அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே அழித்துவிட்டார் என்றும் அதனால்தான் என்னால் அசல் ஆவணத்தை தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்திற்கு முன்னதாகவே மஞ்சம்மாள் வேறு உயிலும் எழுதி வைத்திருந்தார். மஞ்சம்மாள் முன்னதாக எழுதி வைத்த உயில் ஆவணத்தின் அசல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பி.சா.ஆ.1 ஆகும். அவர் இறக்கும்போது சுமார் 92 வயது இருக்கும். அவர் அம்பாசமுத்திரத்தில் வைத்து இறந்தார். அவர் இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேன். எனக்கு உயில் எழுதிக்கொடுத்ததாக கூறும் காலத்தில் மஞ்சம்மாள் எங்கு இருந்தார் என்றால் அம்பாசமுத்திரத்தில் இருந்தார். என்னுடைய உயில் ஆவணம் வா.சா.ஆ.4 ல் அம்பாசமுத்திரத்தில் குடியிருப்பதாக கூறியுள்ளார். மஞ்சம்மாள் இறப்பதற்கு முன்பு சங்கரன்கோவிலில் இருந்தார் என்றால் சரிதான். மஞ்சம்மாளுக்கு கலிங்கப்பட்டி பிள்ளையார்குளத்தில் 5 ஏக்கர் இருந்தது, சங்கரன்கோவில் தளவாய்புரத்தில் சுமார் 1 1/2 ஏக்கர் நிலம் இருந்தது. மஞ்சம்மாள் சொத்துக்களில் என் சகோதரர்களுக்கும், என் சித்தப்பா ராமகிருஷ்ணனுக்கும் பங்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. மஞ்சம்மாள் சொத்தில் நான் உரிமை கோரும் விவரம் என் சகோதரர்களுக்கு

தெரியாது என்றால் சரியல்ல. மஞ்சம்மாள் சொத்துக்கள் எனக்கு மட்டும்தான் பாத்தியப்பட்டது என்பதற்கு நான் கூறும் பாகப்பிரிவினை ஆவணம் தவிர வேறு ஆவணங்கள் இல்லை. நான் வழக்குரையில் கோரும் பாகப்பிரிவினை ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் சகோதரர்களையும், இராமகிருஷ்ணன் வாரிசுகளையும் ஏமாற்றும் நோக்கத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் கண்ட 6 வது இலக்க சொத்தை ஜனார்த்தனனுக்கு பாகத்தில் கொடுக்கப்பட்டதாக வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை ஆவணம் 1987 ல் ஏற்பட்ட ஆவணமாகும். வா.சா.ஆ.4 ஆவணம் 1992 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். வா.சா.ஆ.4 ஆவணத்தில் 1 வது இலக்க சொத்து சங்கரன்கோவில் கோவில் சொத்து என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். அழகர்ராஜாவின் மனைவி பெயர் முத்தம்மாள். 1 ம் தபசில் சொத்து முத்தம்மாளுக்கும், மஞ்சம்மாளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் அவ்வாறுதான் கூறப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.13 ல் கண்ட சொத்து ஜனார்த்தனனும், ராமகிருஷ்ணனும் சேர்ந்து வாங்கிய சொத்துக்கள் என்று மேற்படி ஆவணத்தில் கூறப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. 12.07.2018 ல் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளேன். அது வா.சா.ஆ-11 ஆகும். அந்த மனுவில் எனக்கு உயில் மூலம் சொத்துக்கள் பாத்தியம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. தேதி விபரம் கூறப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் குடும்ப சொத்துக்கள் இதுவரை

பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றும் மஞ்சம்மாள் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை இராமகிருஷ்ணனுக்கு உயில் மூலம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நல்லய்யாவின் சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யாததால் அனைத்து வாரிசுகளையும் தரப்பினர்களாக சேர்க்காததாலும் நல்லய்யாவின் அனைத்து சொத்துக்களும் வழக்கில் குறிப்பிடாததாலும் வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு சொத்துக்களில் தனித்த உரிமை ஏதும் இல்லை என்றும் எனவே நான் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.04.09 18:33:13 +0530